(7) எல்லாக் கக்ஷிகளாலும் ஒத்துக்கொண்டபடி சமஸ்தான அரசியல் துறையில் மாறுபட்ட எண்ணங்கள் தெரிவிப்பது ஒழுங்கான முறையிலும், அரசியல் ரீதியிலும் இருக்கவேண்டுமென்றும், மன்னர் அவர்களின் பதவிக்கு தகுந்த மரியாதை செலுத்தப்பட வேண்டுமென்றும், ஒரு தலைவரோ, அல்லது ஒரு கக்ஷியோ மன்னர் அவர்களை நேரடியாகத் தாக்கி பேசக்கூடாதென்றும், எவ்விதத்திலும் தங்களுடைய கௌரவத்தையும், கண்யத்தையும் குறைத்துப் பேசக்கூடாதென்பதும் இந்திய கவர்ன்மெண்டாரின் விருப்பம்.

மேற்கண்ட முடிவை, தாங்கள் ஒத்துக்கொண்டதாக உடனே பதில் தெரிவித்தால் நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருப்போம். தங்கள் பதில் கிடைத்ததும் ஓர் திவானை தங்கள் சமஸ்தானத்திற்கு சிபார்சு செய்கிறோம்.

ஸ்ரீமான்கள் பாலகிருஷ்ணனும், நாகராஜனும், எங்களது சென்ற கூட்டத்தில் புதுக்கோட்டை தலைவர்களுடன் வந்திருந்ததை நான் பார்த்தேன். இந்தத் தந்தியை நான் அவர்களுக்கு வாசித்துக் காண்பித்தபின் அவர்களால் ஒத்துக்கொள்ளப்பட்டது."

❖ ❖ ❖ ❖

மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் தந்தியில் குறிப்பிட்டுள்ள விஷயங்களை ஒத்துக்கொண்டு டிசம்பர் 5௳ ஓர் பதில் தந்தி கொடுத்துள்ளார்கள்.

❖ ❖ ❖ ❖

கனம் சர்தார் வல்லபாய் படேல் மாக்ஷிமைதங்கிய மன்னர்பிரானின், தீர்க்கதரிசனத்திற்கும் அன்னார் பிரஜைகளின் யோக க்ஷேமத்தைக் கருதி செய்யும் காரியங்களுக்கும், தன் நன்றியைச் செலுத்தி ஓர் கடிதம் விடுத்துள்ளார்கள். மன்னர்பிரானுக்கு கனம் சர்தாரின் கடிதம் வருமாறு:—

"எனது அன்புள்ள ராஜா ஸாஹேப்,

புதுக்கோட்டை சமஸ்தான சம்பந்தமாக, சமஸ்தான மந்திரி சபையிலிருந்து டிசம்பர் 4-ம் தேதி தங்களுக்கு அனுப்பித்த தந்திக்கு, தாங்கள் அதிற்கண்ட விஷயங்களை ஒத்துக்கொண்டதாக பதில் தந்தி மூலம் டிசம்பர் 5-ம் தேதி தெரிவித்ததற்கு மிக்க வந்தனம். நான் ரொம்பவும் சந்தோஷத்தை அடைந்திருக்கிறேன். உங்கள் பிரஜைகளின் முன்னேற்றத்திற்கு பாடுபடும் விஷயத்திற்கும், உங்கள் தீர்க்கதரிசனத்திற்கும் எனது வந்தனம் உரித்தாகும். இது சம்பந்தமான பேச்சு வார்த்தைகள் மிக்க பலனளித்து வருகிறது. நல்லெண்ணமும், நன்னடவடிக்கையும், சமஸ்தானத்தில் இதன் பலனாக ஏற்படுமென்று நான் முழு மனதுடன் நம்புகிறேன். இந்த முடிவு, ஸமஸ்தானத்திற்கும், அதன் பிரஜைகளுக்கும், அழியா சுபிக்ஷத்தைக் கொடுக்கும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

தங்கள் அன்புள்ள,

(ஒப்பம்) வல்லபாய் படேல்.

❖ ❖ ❖ ❖

1947-ம் வருஷ டிசம்பர்மீ 3-ம் தேதி மாக்ஷிமை தங்கிய மன்னர்பிரான், மதராஸ் வீட்டு வாடகை கண்ட்ரோலர் ஸ்ரீமான் C. கருணாகர மேனன் B. A. அவர்களை, புதுக்கோட்டை ஸமஸ்தான திவானாக ஸ்ரீகூர்ந்து நியமித்துள்ளார்கள். ஸ்ரீ மேனன் அவர்கள் டிசம்பர்மீ 26-ம் தேதி தன் பதவியை ஏற்றார். ஜனாப் கான் பஹதூர் P. கலிபுல்லா ஸாஹிப் அவர்கள், அதே மாலை மதராசுக்கு சென்றார்.

* * * *

மாக்ஷிமை தங்கிய மன்னர்பிரான் தன் அந்தரங்க காரியதரிசியும், மெய்க்காப்பாளருமான ஸ்ரீமான் D. V. G. ராமராவ் அவர்களுடன், மாக்ஷிமை தங்கிய பிகானீர் மஹாராஜா அவர்கள் சமக்ஷத்தால் டில்லியில் கூட்டப்பட்டிருக்கும் ஸமஸ்தானாதிபதிகள் கூட்டத்திற்கு 6-ம் தேதி புறப்பட்டார். 8-ம் தேதி காலை மன்னர்பிரான் மதராஸைவிட்டு விமானம் மூலம் சென்றார்கள்.

நவம்பர் 29-ம் தேதி ஆரம்பித்து நான்கு நாட்கள் தொடர்ந்து நடத்திய சட்ட சபையில் அடியிற்கண்ட சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அவைகள் இப்பால் மன்னர்பிரானின் அங்கீகாரம் பெற்றுவிட்டன.

(1) துர்மார்க்க வியாபாரத்தை ஒழிப்பதற்கான ரெகுலேஷன்.
(2) பாய்லர்கள் சம்பந்தமான ரெகுலேஷன்.
(3) தொழிலாளர் சங்கங்கள் ரெகுலேஷன்.
(4) லஞ்சத்தையும், தீச்செய்கையையும் நன்கு தடுப்பதற்கான ரெகுலேஷன்.
(5) பொதுஜன உபயோகமுள்ள ஸ்தாபனங்களை எடுத்துக்கொள்ளுவதற்கான ரெகுலேஷன்.
(6) வார விடுமுறை நாட்கள் (திருத்தப்பாடு) ரெகுலேஷன்.
(7) மருந்துச் சரக்குகள் சம்பந்தமான ரெகுலேஷன்.
(8) முனிஸிபாலிடிகள் (2-வது திருத்தப்பாடு) ரெகுலேஷன்.
(9) கிராமப் பரிஷ்கார (2-வது திருத்தப்பாடு) ரெகுலேஷன்.
(10) கிராமப் பஞ்சாயத்து (3-வது திருத்தப்பாடு) ரெகுலேஷன்.
(11) கிராமப் பஞ்சாயத்து (4-வது திருத்தப்பாடு) ரெகுலேஷன்.
(12) இன்ஷூரன்ஸ் ரெகுலேஷன்.

* * * *

வருமான வரி மசோதா தனிக்கமிட்டிக்கு அனுப்பப்பட்டது. தனிக் கமிட்டி ஜனவரி 10-ம் தேதி கூடி, பிறகு 18-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டு இருக்கிறது.

* * * *

உணவுப்பொருள் பங்கீடு 28—12—47வ முதல் புதுக்கோட்டை முனிஸிபாலிடியைத்தவிர ஸமஸ்தானம் பூராவும் எடுக்கப்பட்டுவிட்டது.

* * * *

மதுவிலக்கு சம்பந்தமான உத்தியோகஸ்தர்கள்கொண்ட ஒரு கூட்டம் ஜனவரி 4-ம் தேதியன்று திவான் பேஷ்கார் ஆபீஸில் நடந்தது. அதற்கு இரண்டு எல்லைப்புறத்திலுள்ள அதிகாரிகளும் விஜயம் செய்திருந்தனர். திவான் பேஷ்கார், போலீஸ் கமிஷனர், உதவி போலீஸ் கமிஷனர், திருச்சினாப்பள்ளி மதுவிலக்கு உதவி போலீஸ் சூபரின்டென்டெண்டு, ஸமஸ்தான கலால் இன்ஸ்பெக்டர் இவர்கள் அதில் கலந்துகொண்டனர். மதுவிலக்கு சம்பந்தமான பல விஷயங்கள் சர்ச்சை செய்யப்பட்டன. மாத்தூர், காடப்பட்டி, அழகம்பட்டி, ஆலத்தூர், உசிலம்பட்டி இவைகளிலிருக்கும் கள்ளு, சாராயக்கடைகளை ஸமஸ்தான எல்கைக்குள் சில

பர்லாங்கு தூரத்தில் தள்ளிப்போடுவது உசிதமென்று தெரிவிக்கப்பட்டது. அபினி, கஞ்சா இன்னும் மற்றைய போதை வஸ்துக்கள் திருட்டுத்தனமாக வாங்குவதைத் தடுப்பதற்குவேண்டிய ஒத்தாசைகள் செய்வதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. அடியிற்கண்ட நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டதாய் அறிவிக்கப்பட்டது.

(1) விராலிமலை சாராயக்கடை மூடப்பட்டது.

(2) எல்கைப்புரத்தில் குத்தகைக்கு மரங்கள் குறிப்பிடுவதைக் கட்டுப்படுத்தியிருக்கிறது.

(3) கள், சாராயம், கஞ்சா இவைகள் சொந்தமாக வைத்திருப்பது பற்றிய நிருதியைக்குறித்து ஓர் விளம்பரம் வெளியிடப்பட்டிருக்கிறது.

(4) உபரியாக சாராயக்கடையோ, கள்ளுக்கடையோ ஆரம்பிக்கப்படவில்லை.

(5) எல்கைப் பிரதேசத்தில் மோட்டார் வாகன வசதியுடன் உள்ள எவருக்கும் கலால் சம்பந்தமான கடைகள் குத்தகைக்கு விடப்படவில்லை.

(6) கலால் இலாகாவை ஒரு கலால் இன்ஸ்பெக்டர், ஒரு தலைமை கான்ஸ்டேபிள், இரண்டு கான்ஸ்டேபிள்கள் இவர்கள் நியமனம்மூலம் அதிகப்படுத்தியிருக்கிறது.

* * * *

அகில புதுக்கோட்டை விவசாயிகள் காங்கிரஸ் ஆதரவின்கீழ் புதுக்கோட்டையில் ஜனவரிமீ 9-ம் தேதி ஓர் மகாநாடு கூடிற்று. "வில்லிங்டன்" ரோடில் இதற்கென பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட ஓர் பந்தலில் இது நடைபெற்றது. கனம் டாக்டர் சுப்பராயன் மகாநாட்டைத் திறந்துவைத்தார்கள். பெருவாரியான மக்கள் குழுமியிருந்தனர். மகாநாட்டிற்கு ஸ்ரீ R. V. ஸ்வாமிநாதன், M.L.A. தலைமைவகித்தார். ஸ்ரீ நாடிமுத்து பிள்ளை இந்திய யூனியன் கொடியை ஏற்றுவித்தார்கள். கனம் சுப்பராயன் அவர்கள், விவசாயம் சம்பந்தமாக உணவுப் பொருளைப் பெருக்க புதிய சுலபமான முறைகளைக் கையாளவேண்டுமென்றும் ஒற்றுமையாகயிருக்கும்படிக்கும் காங்கிரஸ் தத்துவங்களைக் கொஞ்சம் கூட நழுவவிடாமல் கண்டிப்பாக அனுசரிக்கவேண்டுமென்றும் வற்புறுத்தினர். அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமாக மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் விடுத்த பிரகடனங்களை வரவேற்று ஓர் தீர்மானம் நிறைவேறியது. மற்றொரு தீர்மானம் நமது ஸமஸ்தானம் எப்பொழுதுமிருப்பது போலவே தனி சமஸ்தானமாகவே இருக்கவேண்டுமென்பது. பின்னுமொரு தீர்மானம் காவேரியிலிருந்து

சமஸ்தானத்திற்கு ஒரு கால்வாயைக் கொண்டுவர சமஸ்தான சர்க்கார் மதராஸ் கவர்ன்மெண்டாருடன் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்பது. மற்றும் விவசாயிகளுக்கு கடன் திருப்பிக் கொடுக்கும் விஷயத்திலும் கிணறுகள் வெட்டுவதின் மூலமாகவும் அதிகப்படியான வசதிகள் செய்து தரவேண்டுமென்றும், கிராமங்களில் பண்டகசாலைகள் ஏற்படுத்தி சாமான்களின் விலைகளை நிர்ணயம் செய்யவேண்டுமென்றும், தீர்மானங்கள் நிறைவேறின. இன்னுமோர் தீர்மானத்தின் மூலம் இந்த மகாநாடு நிலச்சுவான்தார்களுக்கும் விவசாயிகளுக்கும் மாசூல் பிரிவினை பற்றியுத் தகரார் ஏற்பட்டிருப்பதைக் கண்டு வருத்தந்தெரிவித்தும் கவர்ன்மெண்டார் அவர்களை இது விஷயத்தில் பரிசீலனை செய்ய ஓர் கமிட்டியை நியமிக்கும்படியும் வேண்டிக் கொண்டிருக்கிறது.

❖ ❖ ❖ ❖

கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கு தலைநகர் நகரசபையின் சார்பாக ஓர் வரவேற்பு அளிக்கப்பட்டது. அன்னார் நகரசபை உபதலைவர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவாச்சாரியார் அவர்களாலும் நகர சபை அங்கத்தினர்களாலும் முதலில் வறவேற்கப்பட்டு நகரசபைக் கூடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு உபதலைவராலும் ஸ்ரீமான் வெங்கிட்டராம சர்மாவாலும் வரவேற்பு சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஓர் சிற்றுரை மூலம் பதிலளித்தார்கள். தன்னை நகர சபை அங்கத்தினர்கள் வரவேற்றதற்கு வந்தனமளித்துவிட்டு ஒற்றுமையாயிருக்கும்படி வற்புறுத்தினார். நம்மை எதிர்ப்பவர்களின் மீது வெற்றி பெற்று அவர்களை நம்முடன் சேர்த்துக்கொள்ள நாம் மகாத்மா காந்தியைப் போல் பாடுபடவேண்டுமென்றும் பொதுநலன்களுக்காக உழைக்கவேண்டுமென்றும் எடுத்துரைத்தார்.

❖ ❖ ❖ ❖

டிஸம்பர் மாதம் 15-ம் தேதி மதராஸ் ராஜதானி தேசீய சேமிப்பு உத்தியோகஸ்தராகயிருந்த ஸ்ரீமான் P. கிருஷ்ணமூர்த்தி அய்யரின் மரணத்தைக் குறித்து சீப் கோர்ட்டில் (மூன்று ஜட்ஜுகளும் சேர்ந்து உட்காரப்பட்ட பிரத்யேக பெஞ்சில்) அனுதாப உரைகள் தெரிவிக்கப்பட்டன. ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி அய்யர் புதுக்கோட்டை வக்கீல் சங்கத்தில் ஓர் அங்கத்தினராகயிருந்து பின்னால் சீப் கோர்ட்டில் நீதிபதியாக வந்தவர். அன்னார் 1944-ம் [illegible] மார்ச்சு மாதம் உபகாரச் சம்பளம் பெற்றார். அப்பால் சென்னை ராஜதானியில் டிபன்ஸ் லோன்ஸ் கமிஷனர் (Defence Loans Commissioner) உத்தியோகம் ஏற்றார். ஸமஸ்தான சர்க்கார் வக்கீல் அய்யாவர்களின் குணங்களைப்பற்றியும், அன்னாரின் வக்கீல்

தொழிலைப்பற்றியும் எடுத்துரைத்தார்கள். வக்கீல்கள் சங்கக்காரியதரிசியான ஸ்ரீமான் S. R. ஸ்வாமிநாத அய்யர் அவர்கள் சமஸ்தான சர்க்கார் வக்கீல் நிகழ்த்திய அனுதாப உரைகளில் தாமும் பங்கெடுத்துக்கொள்ளுவதாகத் தெரிவித்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அய்யரின் மறைவு பற்றி கோர்ட்டார் சார்பாக தலைமை நீதிபதி ஸ்ரீமான் ராவ் பஹதூர் P. ரெங்கஸாமி நாயுடு அவர்கள் அனுதாபம் தெரிவித்துக் கொண்டனர்.

❖ ❖ ❖ ❖

உண்மையாகவே தானியப்பொருள்களில்லாமல் உணவுக்குக் கஷ்டப் படுகிறவர்களுக்கு விநியோகம் செய்ய லெம்பலக்குடி, வாராப்பூர், வடவாளம், கீரனூர் இவ்விடங்களில் ஈ-தர்பார் அவர்கள் சகாய விலைக் கடைகள் ஏற்படுத்தும்படி உத்திரவிட்டுள்ளார்கள். ஒவ்வொரு கடையிலும் கஷ்டப்படுகிற மக்கள் ஆயிரம் பேர்கள் வரை தானியங்களை விநியோகிக்கப் படும். விநியோகிக்கப்படும் வேலை கர்ணம் உத்தியோகம் பார்ப்பவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இது சம்பந்தமாய் பங்கீடு இன்ஸ்பெக்டர்களுடையவும் உதவிப்பங்கீட்டு உத்தியோகஸ்தருடையவும் மேற்பார்வையின் கீழ் இந்த அலுவலைச் செய்வார்கள். இந்தக் கடைகள் 12--1—48 முதல் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருக் கின்றது.

❖ ❖ ❖ ❖

சமஸ்தான உணவு நிலைமை.

(1947-ம் வருஷம் நவம்பர்மீ இரண்டாவது பக்ஷத்தியது.)

I

1. சீதோஷ்ண ஸ்திதியும் பயிர் நிலையும் ... மாறுதல் இல்லை.

   ஆனால் பிரஸ்தாப பக்ஷத்திற்கு முதல் வாரத்தில் ஸமஸ்தானம் பூராவும் மழை இல்லை. ஆனால் இரண்டாவது வாரத்தில் சிறு தூற்றல்கள் பெய்தது.

2. தானிய இருப்பு வகையரா ... ,,

   ஆனால் இந்தப் பக்ஷ ஆரம்பத்தில் உணவு தானிய இருப்பு 589·1 டன்களாகும். அதில் 585·5 டன்கள் அரிசியாகும். மூந்திய 4 வாரத்து செலவு திட்டப்படி கணக்கிட்டால் கையிருப்பு அரிசி சுமாராக

இரண்டு வாரத்து பங்கீட்டிற்கு காணலாம். இப்பால் மதராஸ் கவர்ன்மெண்டார் களி கூர்ந்து 200 டன் அரிசியை நவம்பர் மாதத்திற்கும், 400 டன் அரிசியை டிஸம்பர் மாதத்திற்கும் கொடுத்து உதவியுள்ளார்கள். மொத்த வியாபாரிகளிடம் இருப்பு அநேகமாகக் குறைந்து விட்டது. ஆனதால் மதராஸ் கவர்ன்மெண்டார் உடன் காலத்தில் போதிய உணவுத் தானியங்களை விரைந்து கொடுக்காவிடில் பங்கீட்டு முறை முறிந்து பட்டினி ஏற்படுவது நிச்சயம். — மாறுதல் இல்லை.

3. விலை விவரம் ... }
4. சேகரிப்பும், மேற்பார்வையும், சேமித்துவைத்தலும். }
5. போக்குவரத்து ... } ,,
6. பங்கீடும் ஊண்சத்தும் ... }

ஆனல் 15—3—46உ முதல் உணவுப் பங்கீடு ஸமஸ்தானத்தில் அமுலிலிருந்து இதுவரை வெற்றிகரமாய் நடந்து வருவதில் மதராஸ் கவர்ன்மெண்டார் ஸமஸ்தானத்திற்கென்று ஒதுக்கப்பட்ட அளவும், உபரியாக டிஸம்பர் மாதத்திற்காக 900 டன்னையும் ஒதுக்கி அவைகளை விரைந்து அனுப்பாவிடில் பங்கீட்டு முறை நிச்சயம் முறிந்து விடும்.

7. உணவுப் பதார்த்தங்கள் செய்யும் எண்ணெயும், எண்ணெய் வித்துக்களும் புண்ணாக்குகளும். } குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஒன்றுமில்லை

8. பொதுவான விஷயங்கள் :—இப்பக்ஷத்தின் கடைசியில் அரிசி (வழக்கப்படி உள்ள கணக்கு விதப்படி) ஒரு வாரத்திய பங்கீட்டிற்கு போதுமானது. கையிருப்பு தீர்ந்து விட்டதனல் உணவுப் பங்கீட்டு முறை முறியும் தருணத்திலிருக்கிறது.

II

(1947-ம் வருஷம் டிஸம்பர்மீ முதல் பக்ஷத்தியது.)

1. சீதோஷ்ண ஸ்திதியும், பயிர் நிலையும் ... மாறுதல் இல்லை.

ஆனால் பிரஸ்தாப பக்ஷத்தில் சிறு தூற்றல்கள் பெய்தது. பாதிப் பயிர்கள் மழையின்மையால் உலர்ந்து விட்டன.

2. தானிய இருப்பு வகையரா ... ,,

ஆனால், இந்த பக்ஷ ஆரம்பத்தில் உணவுத் தானிய இருப்பு 271·6 டன்களாகும். அதில் 241·4 டன்கள் அரிசியாகும். வழக்கப்படி உள்ள கணக்கு விகிதப்படி அரிசிக் கையிருப்பு 5 நாளைய பங்கீட்டிற்குக் காணலாம்.

3. விலை விவரம் ...

4. சேகரிப்பும், மேற்பார்வையும், சேமித்து வைத்தலும்.

5. போக்குவரத்து ...

6. பங்கீடும், ஊண் சத்தும் ...

7. உணவுப் பதார்த்தங்கள் செய்யும் எண்ணெயும், எண்ணெய் வித்துக்களும் புண்ணாக்குகளும்.

(3–7) ,,

8. பொதுவான விஷயங்கள் :—அரிசிக் கையிருப்பு வழக்கப்படி உள்ள கணக்கு விகிதப்படி இப் பக்ஷத்தின் கடைசியில் 4 நாள் பங்கீட்டிற்கு போதுமானது. கையிருப்பு தீர்ந்து விட்டதால் உணவுப் பங்கீட்டு முறை முறியும் தருணத்திலிருக்கிறது.

காட்டுத்தேனி—கூட்டுத்தேனியான காதை.

(கு. சுந்தரம், ஆசிரிய மாணவன், போதனா பயிற்சி பிரிவு பிரஹதம்பாள் கலாசாலை).

நம் புதுவை மன்னர் கலாசாலையில் ஆசிரியர்களுக்குப் போதனாமுறைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அம்மாணவ ஆசிரியர்களுக்குக் குடிசைத் தொழில்களில் முக்கியமான தேனீ வளர்த்தல், பட்டு உற்பத்தி, காகிதம் செய்தல் முதலிய விஷயங்களை நமது சமஸ்தானக் கிராமப் புனருத்தாரணக் கௌரவ அதிகாரியும் C. S. M. உயர் நிலைப்பள்ளித் தலைமையாசிரியருமான திரு. தேவநேசன் இலவசமாகப் போதித்து வருகிறார்கள்.

அன்னார் விடுத்த ஆக்ஞைப்படி மாணவ ஆசிரிய ஆசிரியைகளாகிய நாங்கள் "தீனசதனம்" என்ற ஏழைகள் விடுதியை 20—11—47௳ மாலை சுமார் 3-மணிக்கு அடைந்தோம். எங்களுக்கு முன்னரே கிராமப் புனருத்தாரணச் செயலாளர்கள் திரு. கமலாகரன், திரு. ஆபிரகாம், பணியாள் சுப்பன் மூவரும் நோக்கத்தின் ஆக்கத்திற்கு வேண்டிய உபகரணச் சேர்க்கையோடு அங்கு பிரசன்னமாயிருந்தனர்.

வானம் கறுத்தது; முகில்கள் ஒன்று கூடின; கதிரவனை மறைத்தன; சிறு சிறு தூறல்கள்; குளிர்காற்று மிளிர்ந்தது. ஆயினும் எங்கள் மனம் தளரவில்லை. அங்கு ஒரு வாதராசா மரம். அம்மரத்தினிடையே ஒரு பொந்து. அதுதான் தேனீக்களின் வாசஸ்தலம். மரத்தைச்சுற்றி முற்றுகையிட்டோம் வீரர்கள்போல். உற்றுப்பார்த்தோம். மரத்தின் மற்றொரு துவாரத்தில் காது வைத்துப்பார்த்தோம். தேனீக்களின் "ஹம்" என்ற சத்தம் கேட்டது. அது பொழுது திரு. தேவநேசனும் அங்கு வந்து எங்களுடன் கூடினர்.

மேற்படி செயலாளர்கள் காரியத்தில் முனைந்தார்கள். ஒருவர் கோடரி கொண்டு கொத்தினர்; மற்றொருவர் அம்மரமேறி சிறு கோடரியினால் மரப்பொந்தைச் சுற்றிச் சிதைத்தார். துவார வாயிலைத் தேனீக்கள் வெளியேறா வண்ணம் துணியினால் மூடினர். ஆக்கத்தொழிலே வாழ்க்கையின் உயர் நோக்கம் என்ற மனப்போக்கமைந்த திரு. தேவநேசனும் கோடரியால் கொத்தினர். அன்னவர் செய்கை எங்களுக்கு முன்மாதிரியாகி அஃதேபோல் எங்களையும் செய்யத்தூண்டியது. போதனையினும் சாலச் சிறந்தது சாதனையே என்பது உணரற்பாலது. சுமார் ஒரு மணி நேரம் கொத்தல், சிதைத்தல், வெட்டல் என்ற முத்தொழிலும் நடந்தன. "துன்பத்திலோர் இன்பம் தோன்றும்" என்பதற்கு சான்றாகத் தேனடை தென்பட்டது.

பின்னர் ஆசிரியர் மரத்தில் ஏறினர். துவாரத்தில் கையைச் செலுத்தி அடையின் அமைப்பை அறிந்தார். நாங்களும் ஒருவர்பின் ஒருவராக ஏறி அங்கு ஆக்கப்பட்டிருந்த ராட்டைக் கண்ணுற்றோம். கொட்டுக்கு அஞ்சி கிட்ட வாராதிருந்தவர்களும் துணிவுடன் ஏறிப்பார்த்தனர். பெண்கள் ஏறிப்பார்ப்பதற்கும் சிறந்த சாதனங்கள் செம்மையுடன் செய்யப்பட்டன.

பின்பு கத்திகொண்டு கவனத்துடன் மரத்தில் ஒட்டிய அட்டையின் பிடிப்பை அகற்றி அடையை எடுத்தனர். பதட்டமின்றித் தட்டில் அதனை இட்டனர். எங்களில் சிலர் அவ்வாறு செய்யப் பழக்கம் பெற்றனர். தேனீக்களும் இவர்களின் செய்கையைக் கண்டிக்கும் பொருட்டுத் தங்களது கடைசி ஆயுதமான கொட்டுகளைப் பிரயோகித்தன. ஆசிரியர் அன்புடன் ஏற்றுப் புன்முறுவல் பூத்து அவைகள் உயிரிழக்காதவண்ணம் உதவினர். செயலாளர்களும் ஆசானது வழியை நேசமுடன் பின்பற்றினர். ஆனால் கொட்டு வாங்கிய சோதரர் சிலர் துள்ளினர், ஓடினர்.

எடுத்த அடைகளை சட்டத்தின் அளவுக்கேற்ப அறுத்தார். பதமானதும் மெல்லியதும், சற்றுத்திண்மையானதுமான வாழை நாரினால் முதலில் ராட்டைச் சுற்றி ஒரு கட்டுக் கட்டிப்பின் ராட்டையைச் சேர்த்துச் சட்டத்துடன் உட்புறத்தில் பொருத்திச் சுற்றி முடிச்சுப்போட்டு முடிச்சு அவிழா வண்ணம் வேண்டிய அளவுவிட்டுக் கத்திரியினால் நாரை வெட்டினர். இம்முறையில் பயிற்சி நாங்கள் பெற்றோம். இவ்வாறு மூன்று சட்டங்கள் ராட்டைத் தாங்கின.

பின்பு சட்டங்களைப் பெட்டியிலிட்டு மூடி துவாரத்திற்கு நேராக வைத்துப் பொந்திலிருந்து தேனீக்களை முத்துக்களை அள்ளுவதுபோல் அள்ளி பெட்டிக்குள் செலுத்தினர். இதுபோல் ஒரு ஆசிரியையும் அச்சமின்றிச் செய்தனர். ஈக்களை எடுக்கும் பொழுது நிதானமாகவும் அசையாமலும் இருந்ததுடன் அவைகள் எல்லாம் பெட்டிக்குள் செல்லும்வரை கொட்டுவாங்கியபோதிலும் அவ்வாறே இருந்தார்.

புது வீட்டிற்குள் புகமுடியாது என்று சத்தியாக்கிரகம் செய்த சில தேனீக்களுக்கு வெளியே செல்ல முடியாதவண்ணம் துவாரத்தின்மீது துணி அரண்கட்டி மற்றொரு பக்கத்தில் துருத்திகொண்டு புகையெனும் ஆயுதம் பிரயோகம் செய்யப்பட்டது. நாங்கள் நல்கும் வீடு நல்லதென்று எண்ணியோ அல்லது மனிதனின் சக்திக்கு நாம் எம்மாத்திரம் என்று நினைத்தோ ஒரு சமரச உடன்பாட்டிற்கு வருவதுபோல் எல்லாம் பெட்டிக்குட் சென்றன. தங்கள் அடையை அங்கு கண்ணுற்ற விந்தையால் வெளியே மறுபடியும் வரச் சிந்தை செய்யாது அவ்விடத்தைச் சொந்தமாக்கின. சிதறி வெளியேறிய சில ஈக்களையும் உள்ளே செலுத்தும் பொருட்டு

விடுத்தலைவரிடம் கொஞ்சம் தேன் வாங்கிப் பெட்டியின் வாயிலில் ஊற்றினர். அவைகளும் தேனைப்பருகி அதுதான் புதுவீட்டின் வழி யென்றுணர்ந்து உள்ளே சென்றன. பின்பு அடித்தட்டைப் பெட்டியுடன் இணைத்துக் கயிற்றால் கட்டினார்கள்.

கதிரவனும், அற்பமாகிய ஈக்களுக்கு நாங்கள் ஒரு புது இல்லம் அமைத்த பான்மையைப் பார்த்துப் பொறுமைப்படுபவன்போல் தன் பழைய இல்லைத்தேடி மேலைக் கடலில் வீழ்ந்தான். பெட்டியையும் தன் பங்களாவிற்குக் கொண்டுவர உத்தரவு செய்து ஆசிரியரும் புறப்பட்டார். மறு நாட்காலையில் 7½-மணிக்குத் தன் மாளிகைக்கு எங்களை வரும்படி உத்தரவிட்டார். நாங்களும் எங்கள் இருப்பிடம் ஏகினோம். இரவெல்லாம் அன்று மாலை நிகழ்ச்சியைப்பற்றிய தேனினுமினிய கனவுகள்.

கனவைக் கௌவிக்கொண்டு காரிருள் கடிதே சென்றது. காகங்கள் கரையும் சப்தம் காலையின் வரவைக்காட்டிற்று. பனிபோன்ற மழைத்துளி மெல்லிய காற்றுச் சில்லென வீசியது. எனினும் நாங்களும் ஆசான் உறை விடம் நோக்கி விரைந்தோம். பெரிய மைதானம் சுற்றிலும் சுவர். வலது பக்கம் வானோங்கிய கோபுரம் தாங்கிய இரட்சகனின் ஆலயம் இனிதுடன் இலங்கிற்று. மைதான வாயிலுக்கெதிரே உள்ளடங்கிய ஆசிரியரிருக்கை தென்பட்டது. எங்களைப் பரிவுடன் ஏற்று மரத்தினடியில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்த அந்தத்தேனடைப் பெட்டியைப் பார்வையிடச் சொன்னார்கள். பெட்டியை அண்மினோம் ஈக்களும் பறந்து திகைத்துத் திகைத்துப் பெட்டியினுள் சென்றன. வீடு புதிது வழியும் பழக்கமற்றது. ஆதலின் தயக்கம் போலும்.

ஆசிரியர் தாம் ஆர்வமுடன் பாதுகாக்கும் ஈக்களின் ஈட்டம் நிறைந்த பெட்டியை, மிகவும் பதனமாக உள்ளிருக்கும் ஈக்களுக்கு கோபம் வாரா வண்ணம் திறந்தார். அதனின்று முட்டைகளும் புழுக்களும் நிறைந்த ஒரு ராட்டை எடுத்தார். அம்மம்ம ! ஈக்களின் எண்ணிக்கை அளவிடமுடியாது. அஃதிலிருந்து அவ்வீக்களை நீக்க இளந்தளிர் நிறைந்த கோல் கொண்டு மனம் தளராது மெதுவாக அவைகளின் அடிவருடினர். செயலாளர்களும் எங்களில் சிலரும் இப்பணியில் பங்கு பெற்றனர். பூதக் கண்ணாடியினால் புழு முட்டையின் பேதத்தைத் தெரிந்தோம்.

புது வீட்டில் குடிபுகுந்த தேன் ராட்டை எடுத்து அதில் ராணி ஈயை உருவபேதத்தால் உணர்த்தினர். பாதுகாப்பாளர்கள் அதை மொய்த்து வெளியே தெரியாவண்ணம் மறைத்து தங்களது கடமையையும் விசுவாசத் தையும் காட்டினதைப் பார்க்குங்கால் மக்களும், மன்னன், தலைவன் முதலியவரிடம் விசுவாசமுடன் இருத்தல் வேண்டும் என்னும் நியதியைப் போதிப்பதுபோல் தோன்றியது.

புதுப்பெட்டியினுள்ள தேனீக்கூட்டம் பெருக்கமற்றது. ஆதலின் அப்பெட்டியிலிருந்து ஒரு சட்ட மெடுத்து புழுவும், முட்டையும் செறிந்த இந்த ராட்டைச் செவ்வனே கட்டினர். இப்பெட்டியுள் வேண்டிய இடை வெளிவிட்டு இதை வைத்தார்கள். பின்னர் ஒரு காகித அட்டையைக் கத்தரித்து ஒரு சட்டத்தில் பொருத்திக் கூட்டினுள் ராட்டையை ஒட்டி வைத்தனர். இது இடத்தைக் குறைக்கவும் உஷ்ண அளவைப் பெருக்கவும், ஈக்களின் கூட்டத்தைச் சீக்கிரத்தில் உலுக்கவும் இயன்ற சாதனம். என்னே மனிதனின் நுட்பமும் சாமர்த்தியமும்.

"பிறன் உனக்கு என்ன செய்ய விழைகிறாயோ அஃதேபோல நீ அவனுக்குச் செய்" என்ற மனுகுலமன்னவன் பொன் மொழிகேற்ப இனிய வெல்லப் பாகை அச்சட்டங்களில் கனிவுடன் ஊற்றினர். "சேய்க்கு உணவு ஊட்டுவதில் தாய்க்கிணையாருமில்லை" என்பதை மெய்ப்பிக்கும் பொருட்டு வருங்காலத் தாய்மார்களாகிய அருமை ஆசிரியைகளில் சிலர் பாகைப் பன்மையுடன் பரிந்து ஊற்றினார்கள். இதுவரை மறைத்துளி பெட்டியினுள் விழாவண்ணம் இந்தத் தேனீ அரசியின் சந்நிதானத்தில் கொற்றக்குடை பிடித்துக் குற்றேவல் புரிந்தார் ஓர் ஆசிரியர். பின்பு கூட்டை மூடினார். ஆசிரியருக்கும் செயலாளர்களுக்கும் நன்றிகூறி, கடவுளின் சிருஷ்டியின் விநோதத்தைப்பற்றிச் சிந்திப்பதா அல்லது அச்சிருஷ்டியாகிய இயற்கையை "படைத்தான் படைப்பெல்லாம் மனுவிற்காக மனுவைப் படைத்தான் தன்னை வணங்க" என்ற தமிழ் மறைதந்த தண்ணளியாளன் வள்ளுவன் உரைத்த உண்மையின் முற்பகுதியை மனிதன் எவ்விதம் தனக்கு உபயோகமாகத் தன்னலமாக்கும் தன்மையை எண்ணுவதா என்று தெளியாது இல்லம் ஏகினோம்.

கெஜட்டுச் செய்திகள்.

ஸென்ஸஸ் சம்பந்தமாக பொது ஜனங்களுக்கு அறிவிப்பு.

சமீபத்தில்கூட இருக்கும் அரசியல் நிர்ணய சபைக்கு வயது வந்தவர்களுக்கு ஓட்டுரிமை கொடுத்து தேர்தல்கள் நடத்தப்படும் என்பது யாவரும் அறிந்ததே. அதற்காக வாக்காளர் ஜாபிதா தயார் செய்யவும் அத்துடன் சமஸ்தானத்திலுள்ள ஜனங்களின் சங்கியையைக் கணக்கிடவும் ஸ்ரீ-தர்பார் அவர்கள் "புதுக்கோட்டை ஸென்ஸஸ் ரெகுலேஷன் 1947" என்று சட்டம் வகுத்து ஸென்ஸஸ் சூபரின்டென்டெண்டுக்கு கீழ் அதிகாரிகள் உண்டு. ஸென்ஸஸ் சூபரின்டென்டெண்டோ அவருக்கு கீழ் உள்ள அதிகாரிகளோ, அல்லது இந்த வேலையை செய்யும் இதர அதிகாரிகளோ

கேட்கும் கேள்விகள் எல்லாவற்றிற்கும் விடையளிக்க பொது ஜனங்கள் ஸென்ஸஸ் ரெகுலேஷன்படி கடமைப்பட்டிருக்கிறார்கள். மேலும் ஸென்ஸஸ் சம்பந்தமாய் ஸென்ஸஸ் அதிகாரிகள் கோரினால் அவர்களால் கோரப்படும் வேலையையும் செய்யவேண்டியது எல்லோருடைய கடமையுமாகும். இந்த வேலை ஸமஸ்தானத்திலுள்ள சகல ஜனங்களும் கலந்து பங்கெடுத்துக்கொண்டு செய்யவேண்டிய ஒரு முக்கியத்துவம் வாய்ந்த வேலை. ஆனதால் இது சம்பந்தமாய் கேட்கப்படும் கேள்விகளுக்கோ செய்யப்படும் விசாரணைக்கோ தவக்கமின்றி விடைகள் கொடுத்து இந்த வேலை செவ்வனேயும், தாமதமன்னியிலும் முடிவடைய ஏதுவாகயிருக்கும்படி எல்லோரும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

2. ஸமஸ்தான பங்கீட்டு விதிகளின்படி தண்டனையடைந்தவர்கள் விபரம்.

திருமயம் தாலூகா.

1. மித்ரவயல் கருப்பன் பர்மிட் இல்லாமல் அரிசியையும் தவிட்டையும் ஏற்றுமதி செய்ததிற்கு அபராதம் ரூ. 30.
2. மேற்படியூர் கருங்கன் அம்பலம் மேற்படி குற்றத்திற்காக அபராதம் ரூ. 30.
3. மேற்படியூர் சுப்பனம்பலம் அதே குற்றத்திற்காக அபராதம் ரூ. 30.
4. கெய்வேலி பழனியாண்டி பங்கீட்டு உணவுப் பொருள் அதிகாரமின்றி வாங்கியதற்கு அபராதம் ரூ. 20.
5. கல்லூர் பீ வெட்டி வெள்ளச்சாமி சட்ட விரோதமாய் அரிசி ஏற்றுமதி செய்ததிற்கு அபராதம் ரூ. 25.

ஆலங்குடி தாலூகா.

1. பிலாவிடுதி துரைசாமி மாகாளி—விதிக்குப் புரம்பாய் அரிசி ஏற்றுமதி செய்ததிற்கு அபராதம் ரூ. 30.
2. காம்பக்குடி காஸிம்மன் செட்டி—மேற்படி குற்றத்திற்காக அபராதம் ரூ. 30.

புதுக்கோட்டை டவுன்.

1. திருவப்பூர் ராமவிலாஸ் ஹோட்டல் முதலாளி வெள்ளச்சாமி பிள்ளை இட்லிகள் போட்டுவிற்றதற்காக அபராதம் ரூ. 15.
2. டவுன், ஸ்ரீகிருஷ்ணபவன் ஹோட்டல் முதலாளி கிருஷ்ண அய்யர் லைஸென்ஸ் பெறாத வியாபாரிகளிடமிருந்து அரிசி வாங்கியதற்காக அபராதம் ரூ. 15.
3. டவுன், சென்ட்ரல் கபே முதலாளி பரமேஸ்வர அய்யர் சர்க்கரையை உபயோகப்படுத்தி தித்திப்பு பலகாரங்கள் செய்ததிற்காக அபராதம் ரூ. 30.
4. டவுன், பாம்பே ஆனந்தபவன் முதலாளி மோதிலால் சேட் தித்திப்பு பலகாரங்களுக்குச் சர்க்கரையை உபயோகப்படுத்தியதற்காக அபராதம் ரூ. 30.

மற்ற பத்திரிகைக் குறிப்புகள்.

பிரதேச மொழிகளுக்கே முதலிடம்.

எஸ். எஸ். எல். ஸி. பாடத் திட்டத்தில் முக்கியமான சீர்திருத்தம்.

வருங் காலத்தில் எஸ். எஸ். எல். ஸி. திட்டத்திலே அந்தந்த பிரதேச மொழியையே முதல் மொழியாகவும், ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகவும் செய்யவேண்டுமென்றும் சர்க்கார் தீர்மானித்துள்ளார்.

இது வரையில் செகண்டரி பள்ளிகளில் ஆங்கிலம் முதல் மொழியாகவும், பிரதேச மொழிகள் இரண்டாந்தரமானவையாகவும் இருந்தது யாவரும் அறிந்ததே. நம் மாகாண மொழிகளுக்குத் தகுந்த இடமளிக்க வேண்டுமானால் மேற்சொன்ன முறையை மாற்றியமைப்பது அவசியமாயிற்று. செகண்டரி கல்வி போர்டாரையும், மாகாண கல்வி ஆலோசனை போர்டாரையும் இது சம்பந்தமாகக் கலந்தாலோசித்தபோது அவர்களும் இதற்கு இணங்கினார்கள்.

இந்த மாற்றத்துக்கேற்றபடி எஸ். எஸ். எல். ஸி. முறையில் புதிய பாடத் திட்டம் ஒப்புக்கொள்ளப்பட்ட பின்பு அவசியமான திருத்தங்கள் செய்யப்படும். அதற்குள் நடைமுறை வருஷங்களில் நிகழும் எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷைகளிலும், வகுப்புப் பரீக்ஷைகளிலும் கொடுக்கப்படும் கேள்வித் தாள்கள் புதிய திட்டத்தின்படி அமைக்கப்பட வேண்டும்.

[சென்னைச் செய்தி 15-12-47].

பர்மா மொச்சையைப்பற்றிய முடிவு.

சில மாதங்களுக்கு முன்பு பர்மாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மொச்சைக் கொட்டையில் 'ஹைட்ரொஜன் ஸயனேட்', என்றும் ஒரு வகை விஷம் கலந்திருந்ததின் காரணமாகப் பொது சுகாதாரச் சட்டத்தின் 108-வது பிரிவின்படி அதை விற்பனை செய்யக்கூடாதென்று சர்க்கார் உத்திரவிட்டிருந்தனர். கையிருப்பில் இருக்கும் சரக்குக் கெட்டுக்கொண்டே போகிறதென்றும், மற்ற மாகாணங்களிலுள்ள சில பிரதேசங்களில் மேற்சொன்ன சரக்கு வேண்டப்படுகிறதென்றும் பலர் சர்க்காருக்குத் தெரிவித்துக்கொண்டனர். இது சம்பந்தமாக சர்க்கார் ஒரு விஷயத்தைத் தெளிவு

படுத்த விரும்புகின்றனர். அதாவது மேற்சொன்ன மொச்சையை இறக்குமதி செய்யும்போது வியாபாரிகள் சர்க்காருக்கு இதைப்பற்றி தெரிவித்தோ அல்லது சர்க்காரின் அனுமதி பெற்றோ தருவிக்கவில்லை. எனவே இந்த மாகாணத்திற்கு வெளியே அவற்றை ஏற்றுமதி செய்வதற்குத் தடையாக இருக்கவும் சர்க்கார் விரும்பவில்லை. இந்தச் சரக்கை நம் மாகாணத்திலிருந்து ஏற்றுமதி செய்ய விரும்புவோர் எந்த பிரதேசத்தில் அல்லது சமஸ்தானத்தில் அதைக்கொண்டு சேர்க்க விரும்புகிறார்களோ அந்த சர்க்கார்களிடமிருந்து இறக்குமதி "பர்மிட்"டையும் வாங்கவேண்டும். இதற்காக இப்போது சரக்கு இருக்கும் இடத்தைச் சேர்ந்த ஜில்லா கலெக்டருக்கு எழுதி ஏற்றுமதி செய்வதற்கு அவருடைய அனுமதி பெறவேண்டும். இவ்வாறு செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களை அந்தந்த கலெக்டர்கள் பார்த்து, தடை உத்தரவை நீக்கி, இறக்குமதி 'பர்மிட்'டில் அனுமதிக்கப்பட்டுள்ள சரக்கின் அளவை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் (அதாவது சாதாரணமாக ஒரு மாதத்திற்குள்) ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பாடு செய்வார்கள். குறிக்கப்பட்ட கால அளவிற்குள் அதை ஏற்றுமதி செய்யாமலிருந்தால் அல்லது ஏதோ ஒருவிதமாக அந்தச் சரக்கு இந்த மாகாணத்திலேயே உபயோகப்படுத்தப்பட்டது என்று எண்ண இடமேற்படுமானால் பொது சுகாதாரச் சட்டத்தின்படி மறுபடியும் முன்போல் விற்பனை தடை செய்யப்பட்டு முடக்கி வைக்கப்படும்.

[சென்னைச் செய்தி 15—12—47].

முந்திரிக் கொட்டை வறுக்க நூதன யந்திரம்.

சர்க்கார் கைத்தொழில் என்ஜினியரிங் இலாகா தொழிற்சாலைகளில் தொழில் வியாபார இலாகாவினர் நெடுங்காலமாக [illegible]ர்ந்த ரீதியில் நடத்தி வந்த பரிசோதனைகளின் பயனாக முந்திரிப் பருப்பு வருப்பதைக் குடிசைத் தொழிலாக நடத்துவதற்கு அனுசரணையாக உபயோகமாகும் ஒரு நூதன கருவி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த "ரோஸ்டர்" முந்திரிக் கொட்டையை திருப்திகரமாக வறுப்பதுடன், முந்திரி ஓட்டிலுள்ள எண்ணெயில் பெரும் பகுதியையும் இழுத்துவிடுகிறது. மேலும் சாதாரணமாக முந்திரிக் கொட்டை வறுக்கும்போது ஏற்படும் ஓவ்வாத நீர்ப் புகைகள்,

வாசனைகளையும் இது தடுத்துவிடுகிறது. புகைகள் ரோஸ்ட்டரைவிட்டு வெளிக் கிளம்பு முன்னரே வெறுக்கத்தக்கதும், கடுமையானதுமான சத்தம் ஏற்பட்டு விடுகிறது. இதனால் முந்திரிக் கொட்டை வறுக்கப்படும்போது ஏற்படும் துர் நாற்றம் முதலியன ரோஸ்டர் மூலம் வறுப்பதினால் நின்று போய் விடுகின்றன. முந்திரிப் பருப்பை அதிகமாக கருக்கிவிடாதபடி யந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. முந்திரி எண்ணெயும் பிரத்யேகமான பாத்திரத்தில் வந்துவிழ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது மொத்தம் 6 அடி நீளம் 18½ அங்குல அகலம், 2½ அடி உயரமுள்ளதாக இருக்கிறது. ஒரு நாள் 8 மணி நேரம் வேலை செய்தால் இதில் 500 முதல் 600 பவுண்டு முந்திரிக் கொட்டையை வறுக்கலாமென்று மதிப்பிட்டிருக்கிறது. இந்த ரோஸ்டரை இயக்கி வேலை செய்வதற்கு இரண்டு பேர்கள் வேண்டும். இதில் வறுக்கப்பட்ட கொட்டைகளை உடைத்துப் பருப்பை வேறாக பிரிப்பதற்காக அமர்த்தப்படும் வேலையாளர்கள் சேர்க்கப்படவில்லை. இந்த ரோஸ்டரை தயாரிக்க ரூ. 350 செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

[சென்னைச் செய்தி 15—12—47].

பர்மா செய்திகள்.

நிலச் 'சேவா'.

(*By A. Venkatarama Ayyar,* B. A,. B. L.)

பர்மாவில் இனி நிலச் சுவான்தார்களுக்குக் கிடைக்கக்கூடிய 'சேவா' **(Rent)** நில வரி எவ்வளவோ அதற்கு இரண்டு மடங்கு மட்டில்தான் என்று பிரஸ்தாபப்படுகிறதே, அது உண்மைதானா? என்று பலர் கேட்கிறார்கள். அதற்கு விடையே இந்த கட்டுரை.

"டெனன்ஸி ஆக்ட்' (Tenancy Act) என்று பர்மா அரசாங்கத்தார் **1946**-ம் வருஷத்திய **21**-வது 'ஆக்டு' ஆக ஒரு 'ஆக்டு' பிறப்பிவிக்கப்பட்டிருக்கிறது. நிலச் சுவான்தாருக்கும், குடியானவனுக்கும் 'சரியான சேவா' **(Standard Rent)** சம்பந்தமாக தகரார் ஏற்படும் பக்ஷத்தில் நிலச் சுவான்தாரோ, அல்லது குடியானவனோ, 'ரெவின்யூ ஆபீஸர்' **(Revenue**

Officer) என்ற அதிகாரிக்கும் மனுச் செய்துகொள்ளலாம். அவர் எந்த கிராமத்தில் தகரார் நிலம் இருக்கிறதோ அந்த கிராமத்திலுள்ள விவசாயிகளிலிருந்து நிலச் சுவான்தாரால் நியமிக்கப்பட்ட நபர் ஒருவரையும் குடியானவனால் நியமிக்கப்பட்ட நபர் ஒருவரையும், தன்னால் நியமிக்கப்பட்ட நபர் ஒருவரையும் கலந்து, நிலச் சுவான்தாரையும் குடியானவனையும் கேட்டு 'கவர்னர்' அவர்களால் இதற்குக் குறையாமல் இதற்கு மேல் போகாமல் 'சேவா' நிர்ணயிக்கப்படவேண்டும் என்று பிறப்பிவிக்கப்பட்ட விளம்பரத்தில் கண்ட விகிதத்தையும் அனுசரித்து 'சரியான சேவா'வை நிர்ணயிப்பார். 'சேவா'வுக்கு மகசூலில் 'சார்ஜ்' (charge) உண்டு, 'சேவா'வை குடியானவன் ஒழுங்காகக் கொடுக்க மாட்டானென்று நிலச் சுவான்தாருக்குத் தோன்றினால் அவர் கிராமப் பெரிய தனக்காரர் (Headman) இடம் மனுச் செய்து கொள்ளலாம். கிராமப் பெரிய தனக்காரர் மகசூலை ஜப்தியில் வைக்கலாம். ஒழுங்காக 'சேவா' கொடுக்கும் குடியானவனுக்கு மறு வருஷத்திலும் நிலத்தை சாகுபடி செய்ய உரிமையுண்டு.

இந்தப்படி நிர்ணயிக்கப்படும் 'சேவா' கூட மிகவும் அதிகம் என்றும், 'சேவா'வையும் கிருஷி செய்வதிலேற்படும் செலவையும் மகசூலில் இருந்து எடுத்துவிட்டால் தங்களுக்கு மிகுதியாகவுள்ளது மிகவும் சுவல்பமே என்று, அதைக்கொண்டு தங்களையும், தங்கள் குடும்பத்தாரையும் சம்ரக்ஷித்துக் கொள்ளுவது சிரம சாத்தியமென்றும் குடியானவர்கள் போராடினார்கள். இது ஒரு விதத்தில் சரியே என்று பர்மா அரசாங்கத்தாருக்குப்பட்டது. 1947—1948 வருஷத்தில் அக விலை கூடுதலாக உள்ளதால் இந்த வருஷத்துக்கு மட்டில் 'சேவா'வை சரியான 'சேவா'வுக்கும் குறைவாக ஏற்படுத்த நெல் விலையையும் அதிகப்படுத்தினால் குடியானவர்களுக்குள்ள சிரமத்தை ஒரு அளவில் பரிகரித்ததாக ஆகுமென்று கருதி பர்மா அரசாங்கத்தார் 'டெனன்ஸி (ஸ்டாண்டார்டு ரெண்டு) ஆக்டு' (Tenancy Standard Rent Act) என்று 1947-ம் வருஷத்தில் 78-வது 'ஆக்டு' ஆக ஒரு 'ஆக்டு' பிறப்பித்திருக்கிறார்கள். இதன் பிரகாரம் 'டெனன்ஸி ஆக்டு'இல் கண்ட 'சரியான சேவா' சம்பந்தமான அம்சங்கள் 1947—1948 விவசாய வருஷத்துக்கு அன்வயிக்காது. நில வரி எவ்வளவோ அதற்கு இரு மடங்கு 'சரியான சேவா'வாக கருதப்படும். 'சரியான சேவா'வை குடியானவர்கள் ரொக்கமாகவும் கொடுக்கலாம், நெல்லாகவும் கொடுக்கலாம். நெல் விலை 100 கூடைக்கு ரூ. 300 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த 'ஆக்டு' 1947—1948 விவசாய வருஷத்துக்கு மட்டில்தான். 1948—1949 வருஷத்தில் அக விலை மலிந்தால் 'டெனன்ஸி ஆக்டு' இதில் கண்டபடி 'சரியான சேவா' நிலச் சுவான்தார்களுக்குக் கிடைக்கலாம்.

மற்ற விஷயங்கள்.

தமிழ் உரிமைக் கழகம்.

(கீழச்சிவப்பட்டி).

புதுவைப் பெருமகனும் தமிழ்ப் பெருவள்ளலுமான ஆனந்தரங்கப் பிள்ளை திருநாள் ஜனவரிமீ 11-ம்வ மாலை 'தாய் நாடு' ஆசிரியர் திரு. க. நாராயணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இளவாசன் திரு. நா. நடராஜன் வரவேற்புரை கூறினர். கோனபட்டு ஜெய் ஹிந்த் திரு. சேதுராமன் செட்டியார் அவர்கள் ஆனந்தரங்கம் பிள்ளையின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்கள். பின்னர் நாடகாசிரியர் திரு. கு. சா. கிருஷ்ணமூர்த்தி, திரு. நா. வள்ளிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றியதும் தலைவர் முடிவுரையும், நன்றியுரையும் நிகழக் கூட்டம் இனிதே நிறைவெய்தியதென்று மேற்படி கழகச் செயலாளர் அறிவிக்கின்றார்.

புதுக்கோட்டை தனியரசு ஸர்க்கார் சேவகர்கள் சங்கம்.

28—12—47 தேதி மாலை 5-மணிக்கு ஆனந்தபாக் தோப்பில் சங்கத்தின் மகாசபைக் கூட்டம் சங்கத் தலைவர் திரு. விசு. திருநாவுக்கரசு தலைமையில்கூடி கீழ்க்கண்ட தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றின.

(1) 12—12—47 தேதி ஈடர்பாரவர்கள் சமஸ்தான சர்க்கார் ஊழியர்களுள் சேவகர்களாகிய எங்களுக்கும் சேர்த்துப் பஞ்சப்படியாக ரூபாய் 3 உயர்த்தி இருப்பதற்கு எங்கள் சங்கம் தனது நன்றியை ஈடர்பாரவர்கட்குத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

(2) சென்னை மாகாண சர்க்கார் தற்பொழுது பியூன்களுக்கு 16–25 சம்பள விகிதமும் வருஷ உயர்வான 0—8—0-வும் டபேதார்களுக்கு 22–30 சம்பள விகிதமும் வருஷ உயர்வு 0—8—0-வும் வீட்டு வாடகை 5—0—0-ம் பஞ்சப்படி 16-ம் கொடுத்து வருகிறார்கள். ஆரம்பத்திலிருந்தே முறையே 37-ம், 43-ம் கிடைத்து வருகிறது. அதைப்போல ஈடர்பாரவர்களும் கருணைகூர்ந்து எங்கட்கு அளித்து உதவுமாறு இச்சங்கம் ஈடர்பாரவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறது.

(3) அடிப்படைச் சிப்பந்திகள் எல்லோரையும் சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளவேண்டியதாகயிருப்பதால் அதற்கேற்ப சங்கத்தின் பெயரை 'தனியாக அடிப்படைச் சிப்பந்திகள் சங்கம்' என்று பெயரை மாற்றுவது என்று இம்மகாசபைக் கூட்டம் தீர்மானிக்கிறது.

(4) தற்போது அமைக்கப்போகும் சம்பளக் கமிஷனில் நமது நியாயமான கோரிக்கைகளை எடுத்துச்சொல்லி ஆவன செய்வதற்கு சங்கத்தின் சார்பாக இருவருக்கு மேற்படி கமிஷனில் ஸ்தானம் வழங்குமாறு ஸ்ரீ-தர்பாரவர்களை இச்சங்கம் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறது.

(5) ஸ்ரீ-கருணாகர மேனன் அவர்கள் நமது சமஸ்தான புதிய திவானாக நியமிக்கப்பட்டதை அறிந்து இச்சங்கம் தனது மகிழ்ச்சியை ஸ்ரீ-தர்பாரவர்கட்குத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

காரியதரிசி நன்றிகூறக் கூட்டம் முடிந்தது.

மேற்படி சங்கத்தின் சார்பில் தலைவர் விச. திருநாவுக்கரசு அவர்கள் 22—12—47-ல் மாட்சிமை தங்கிய மன்னர் அவர்களை பேட்டிகண்டு அடிப்படைச் சிப்பந்திகள் சங்கத்தின் சம்பள சம்பந்தமான தீர்மானங்கள் அடங்கிய பிரதியொன்றை நேரில் சமர்ப்பித்து சென்னை சர்க்கார் அளித்துவரும் சம்பள விபரத்தையும் எடுத்துக்கூறினர். மாட்சிமை தங்கிய மன்னரவர்கள் கருணையுடன் அவைகளைக் கேட்டுக்கொண்டு ஆவன செய்வதாய் கூறியுள்ளார்கள் என்று மேற்படி சங்கத்தின் உப காரியதரிசி அறிவிக்கின்றார்.

Sri Brihadamba State Press, Pudukkottai, 850—19-1-48.

வந்தேமாதரம்!

ஜெய் ஹிந்த்!!

RAJA SOAP WORKS PUDUKKOTTAI

Raja Soap Works

நாகரீக உலகத்தில் மங்கையும், மகனும்

விரும்புவது தூய ஆடை

(காரணம்)

"சுத்தம் சோறுபோடும்

சுத்தமே சுகம் தரும்"

அச்சுத்தமே

கடவுளுக்கு அடுத்தபடி மதிக்கவேண்டிய விஷயமும் ஆகும்.

✣

இவைகளைப் பூர்த்திசெய்வது

"ராஜா சோப் ஒர்க்ஸின்"

"கங்கை பார் சோப்புகள்"

818 கீழ ராஜ விதி, புதுக்கோட்டை.

Published by the Publicity Officer, Pudukkottai State. Printed at the Sri Brihadamba State Press, Pudukkottai. All communications should be addressed to the Publicity Officer, Pudukkottai.